**விலை மனு கோரல்**

**விவசாயம், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு**

**இலங்கை நில அளவைத் திணைக்களம்**

**பாதுகாப்புச் சேவையைப் பெற்றுக் கொள்ளுதல் – 2025**

**விலை மனு இலக்கம் – SD/II/2025**

1. நில அளவைத் திணைக்களத்தின் 2025/26 வருடாந்திர தேவைப்பாட்டுப் பெறுகைகளுக்கு உரியதாக சகல மாகாண நில அளவை அலுவலகங்கள், மாவட்ட நில அளவை அலுவலகங்கள் மற்றும் பிரதேச நில அளவை அலுவலகங்களுக்கான பாதுகாப்புச் சேவை பெறுகைகளுக்காக வழங்குநர்களிடம் இருந்து முத்திரையுடன் கூடிய விலை மனுக்களை சமர்ப்பிப்பதற்காக மேற்கொள்ளப்படுகின்ற அழைப்பாகும்.
2. விலை மனுக்களைக் கோருதல் தேசிய போட்டித்தன்மையான விலை மனு கோரல் நடைமுறைகளுக்கு அமைய முன்னெடுக்கப்படுவதுடன் ஒரு மாவட்டத்தில் அமைந்துள்ள நில அளவைத் திணைக்களத்திற்குச் சொந்தமான அனைத்து அலுவலகங்களுமே சமர்ப்பிக்க முடியுமான குறைந்தபட்ச அலகில் உள்ளடங்கும்.
3. அதற்காக ஆர்வம் காட்டுகின்ற விலை மனுதாரர்களுக்கு பின்ரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள அலுவலக நேரத்தில் விலை மனு கோரும் ஆவணங்களை உரிய மாகாண நில அளவை அலுவலகங்களில் பரிசீலனை செய்ய முடியும் என்பதுடன் உரிய மாகாண நில அளவை அலுவலகங்களின் தொலைபேசி இலக்கங்களுக்கு தொடர்பு கொள்வதன் மூலம் மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.
4. ஆயிரம் ரூபாய் (1,000.00) வீதம் மீள செலுத்தப்படாத தொகையில் 21.07.2025 ஆம் திகதி வரை மு.ப. 9.00 மணி தொடக்கம் பி.ப. 2.00 மணி வரை செலுத்தப்படுகின்ற கொடுப்பனவின் அடிப்படையில் அலுவலக நேரத்தில் மாகாண நில அளவை அலுவலகத்திற்கு கோரிக்கைக் கடிதம் ஒன்றை முன்வைத்த பின்னர் விலை மனுதாரர்களுக்கு விலை மனு கோரும் முழுமையான ஆவணத் தொகுதி மற்றும் விண்ணப்பப்படிவத்தைப் பெற்றுக் கொள்ள முடியும் என்பதுடன் விலை மனுப் பத்திரங்களைப் பூரணப்படுத்துவதற்காக வழங்கப்படுகின்ற வழிகாட்டல் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஆலோசனைகளை நன்கு வாசித்து அதன் படி செயற்படுமாறு தெரிவித்துக் கொள்கின்றோம்.
5. சமர்ப்பிக்கப்படுகின்ற விலை மனுக்களின் செல்லுபடிக் காலம் விலை மனு திறக்கப்படுகின்ற நாளில் இருந்து 50 (10.09.2025 ஆம் திகதி வரை) நாட்களுக்குச் செல்லுபடியாதல் வேண்டும்.
6. முன் விலைமனு ஒன்றுகூடலானது 08.07.2025 ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு உரிய நில அளவையாளர் நாயக அலுவலகத்தில் இடம்பெறும்.
7. விலை மனுக்களை ஏற்றுக் கொள்ளுதல் 22.07.2025 ஆம் திகதி மு.ப. 9.00 மணிக்கு நிறைவடைவதுடன் விலை மனுக்களை ஏற்றுக்கொள்ளுதல் நிறைவடைந்த உடனேயே உரிய மாகாண நில அளவையாளர் அலுவலகத்தில் விலை மனுக்கள் திறக்கப்படும்.

| தொடர் இலக்கம் | மாகாண நில அளவை அலுவலகம் | முகவரி | தொலைபேசி இலக்கம் |
|---|---|---|---|
| 01. | மாகாண நில அளவை அலுவலகம் (வட மேல்) | மாகாண நில அளவை அலுவலகம், உடவல்பொல வீதி, குருநாகலை | 037 – 2221062 |
| 02. | மாகாண நில அளவை அலுவலகம் (தெற்கு) | மாகாண நில அளவை அலுவலகம், கீழ் டிக்ஸன் வீதி, காலி | 091 – 2234195 |
| 03. | மாகாண நில அளவை அலுவலகம் (ஊவா) | மாகாண நில அளவை அலுவலகம், பள்ளி வீதி, பதுளை | 055 – 2222037 |
| 04. | மாகாண நில அளவை அலுவலகம் (சப்ரகமுவ) | மாகாண நில அளவை அலுவலகம், புதிய நகரம், இரத்தினபுரி | 045 – 2222935 |
| 05. | மாகாண நில அளவை அலுவலகம் (வட மத்திய) | மாகாண நில அளவை அலுவலகம், அநுராதபுரம் | 025 – 2222960 |
| 06. | மாகாண நில அளவை அலுவலகம் (கிழக்கு) | மாகாண நில அளவை அலுவலகம், உட் துறைமுக வீதி, திருகோணமலை | 026 – 2222170 |
| 07. | மாகாண நில அளவை அலுவலகம் (மேல்) | மாகாண நில அளவை அலுவலகம், இலக்கம் 150, பர்னாட் சொய்சா மாவத்தை, கொழும்பு 05 | 011 – 2587234 |

நில அளவையாளர் நாயகம்
27.06.2025